REGD. No. M. 6311

PHONE No. 55[illegible]

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 170

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 21உ. செவ்வாய் (5—1—54) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 22உ. புதன் (6—1—54)

உத்தமர் காந்தியார் கனவு நனவாக எல்லாக் கட்சிகளும் பொதுத் துறையில் ஒன்றுபட வேண்டும்

—:x:—

மாற்றார் தோட்டத்து மல்லிகைக்கு மணமிருக்காது என எண்ணுபவனல்ல நான்!

—(:)—

மாற்றுக் கட்சியினருக்கு வாய்ப்பளிப்பதே அரசியல் நாகரீகம்!

—(:)—

காந்தியார் வளர்த்த காங்கிரசின் நிலை என்ன? அந்த 'ஒளி' எங்கே? இந்த 'இருள்' எங்கே?

—(:)—

உத்தமர் காந்தியார் உருவச்சிலைத் திறப்பு விழாவில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை

"வேலூர் நகராட்சி மன்றத்தார், மணி மண்டபத்தில் விளங்கும் உத்தமரின் சிலையைத் திறக்கும் பணியினை எனக்களித்தார்கள். இது பற்றிக் குறிப்பிட்ட மன்றத் தலைவர், 'வேலூர் வரலாற்றிலேயே, இன்று, ஓர் பொன்னாள்,' எனக் குறிப்பிட்டார். என்னைப் பொறுத்தவரையிலேயே, என்னுடைய வாழ்க்கையில்—ஏன்—தமிழ்நாட்டின் அரசியலில் ஒரு முக்கியமான கட்டம் என்று கூறுவேன். காந்தியாரின் உருவச் சிலையை நான் திறக்கிறேன்—இந்தச் செய்தியால், அரசியல் வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியை, நாடு அறியும்.

எனக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பு—என்னைப் பொறுத்தவரையில்—முதல் முறையல்ல; இரண்டாவது தடவை. இதற்கு முன்னரே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இடைப்பாடியிலே, ராஜாஜி பூங்காவிலேயுள்ள காந்தியாரின் சிலையை, நான் திறந்து வைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்; ஆனால், அங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள், இந்துப்போல் கிலேசம் அடையவில்லை; பீதியடையவில்லை; 'இவனாவது. திறப்பதாவது!' என்று கூறவில்லை.

காந்தியாரின் உருவச் சிலையை நான் திறக்கிறேன்—நான் திறக்க வேண்டும் என்று நகராட்சி மன்ற நண்பர்கள், பெரிதும் விரும்பியிருக்கிறார்கள். காரணம் என்ன? காந்தியாரின் சிலையைத் திறக்க, நான் மட்டுமே தகுதியுள்ளவன் என்பதாலா? அல்ல! அல்ல! என்னைவிடத் தகுதியுள்ளவர்கள் ஏராளம் இருக்கிறார்கள்; ஆனால், நான் வந்து திறக்க வேண்டும் என்று நண்பர்கள் விரும்பியதற்குக் காரணம், 'மற்றவர்கள் எவ்வளவோ திறப்பு விழாக்களை செய்கிறார்கள்—அதோடு, இதுவும் பத்தோடு பதினொன்றாகப் போய்விடும்—ஆகவே, இவனையும் இதுபோன்ற காரியத்துக்குத் தகுதியுடையவனாக்குவோம்,' என்ற நல்லெண்ணமாகவே இருக்கும் எனக் கருதுகிறேன்.

எனக்குப் பதில், இந்நாட்டு முதலமைச்சர், காந்தியாரின் சிலையைத் திறந்திருக்கலாம்; ஆனால், அது, அவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்காது. அவர் அடிக்கடி திறந்து வைக்கும் பல சின்னங்களிலே, இதுவும் ஒன்றாகப் போயிருக்கும்; அதனாலேயே, என்னை—காந்தியாரின் முகாமிலே இல்லாதவனும்—அவரது திட்டங்களில் சிலவற்றை ஏற்று, சிலவற்றைக் கண்டித்தவனும்—ஆகிய என்னை, இந்தப் பணியை நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கண்டு, என தருமைக் காங்கிரஸ் நண்பர்கள், கலக்கமா அடைவது?

மாற்றான் தோட்டத்து மல்லிகையென்பதால், அதன் மணத்தை ரசிக்கிறானா அல்லது ரசிக்க மறுக்கிறானா, எனப் பார்த்திருக்கலாம்! என்னைப் பொறுத்தவரையில், மல்லிகை மாற்றாரிடமிருப்பதால், அதற்கு மணமிருக்காது என்று உரைப்பவனல்ல. அதனால்தான், நண்பர்கள் வந்து என்னை அழைத்ததும், ஒப்புக்கொண்டேன்.

அவர்கள் அழைத்த நேரத்தில், நகராட்சி மன்றத்தினர் மெஜாரிடி முடிவோடு, என்னை அழைக்கத் தீர்மானித்திருப்பதாகவும்—ஒரு முறைக்கு, இரண்டு முறை!—தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகவும் குறிப்பிட்டனர். ஆகவே, நான் வர இசைந்தேன்.

இந்தச் சிலைத் திறப்பு விழாவுக்கு, உள்ளூர் காங்கிரஸ் கமிட்டியினரும் கடைசி நேரத்திலே, கூடி, இந்த விழாவில் ஒத்துழைக்க வேண்டுமெனத் தீர்மானம் செய்தார்களாம். இந்தப் பெருந்தன்மைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக் கொள்ளுகிறேன்.

ஏன், இவர்களுக்கெல்லாம் நன்றி கூறுகிறேன் என்றால்—இதுபோன்ற பெருந்தன்மை, அரசியல் வாழ்வில் நிலவ வேண்டும் என்ற ஆசை கொண்டவன், நான். அதற்கு உதாரணம் போல், நாம் எல்லாம் நடந்து காட்ட வேண்டும்.

'உத்தமர் காந்தியாரிடத்தில், எனக்கு மதிப்பு உண்டா?' இவ்விதம், சிலர், கேட்கிறார்கள். அவர்களுக்குச் சொல்வேன்—மதிப்பு காட்டுவது என்பது இரு வகைப்படும்: எதிரில் வாயாரப் புகழ்ந்துவிட்டு, தலை மறைந்ததும் மாறாகப் பேசுவது. ஒருவகை! பழகாவிட்டாலும், கூடாரத்திலில்லாவிட்டாலும், பிறரின் பணியினை தனித்திருக்கிற நேரத்தில் எண்ணி எண்ணி, மகிழ்வது இரண்டாவது வகை.

நான், இரண்டாவது வகையைச் சேர்ந்தவன். நம்முடைய உலக உத்தமர், உயிரோடிருந்த நாட்களில்—பிடிக்காதவைகளைக் கண்டித்த போதும்—எனக்கேற்ற எண்ணங்களைப் பாராட்டிய போதும், அவருக்குள்ள சிறப்பை நான் எண்ணாமலிருந்ததில்லை.

மாற்றார், காந்தியாரைப் பற்றி, என்னுமளவுக்கு, அவருடைய தொண்டு இருந்ததால்தான், அவர் உலகத்தின் ஒளியானார்! காந்தியாரின் புகழை, காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல—எல்லோரும் புகழ்கிறார்கள்; உலக மக்களெல்லாம் பாராட்டுகிறார்கள். அவ்விதம், பிறர் போற்றுவதுதான், ஒரு தலைவருக்குக் கிடைக்கும், தனி மரியாதையாகும்.

இதனை, காங்கிரஸ் நண்பர்கள் எண்ணியிருந்தால், என்னை உள்ளன்போடு வரவேற்றிருக்க வேண்டும். மாற்றுக் கட்சிக்காரனான நான், திறந்து வைப்பதைக் குறித்துப் பெருமையடைந்திருக்க வேண்டும்.

'அருளொழுகும் கண்ணைப் பார்! அழகு மேனியைப் பார்! ஒளி தவழும் முகத்தைப் பார்! எங்கள் உத்தமரைப் பார்'—என்று, என்னை அழைத்துச் சொல்லியிருக்க வேண்டும். இவ்விதம் செய்திருந்தால், தங்களுக்கும் கீர்த்தி தேடிக் கொண்டவர்களாவார்கள்; உத்தமருக்கும் கீர்த்தி தேடிக் கொடுத்தவர்களாவார்கள். அதை விட்டு விட்டு, எம்முடைய காந்தியாரைத் தீண்டவே, கூடாது!—என்று சொல்வது, பொருத்தமில்லை — பொருளில்லை — கீர்த்தி இல்லை—சிறப்பு இல்லை.

உத்தமர் காந்தியார் வெறிகொண்ட ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனும் செய்தியை, 'ரேடியோ' மூலமாகக் கேள்விப்பட்டேன்—பதறினேன். அப்போது என்னை வானொலி நிலையத்தார், அழைத்தார்கள். காந்தியடிகளைக் கொன்றவன், மராட்டிய பார்ப்பனனான கோட்சே, என்பவன். அதனால், மக்களின் ஆத்திரவெறி, அக்குலத்தார்மீது பாய்ந்து விடுமோ என்று அஞ்சிய காரணத்தால், என்னை அழைத்துப் பேசச் சொன்னார்கள். கயவனாயிருந்தால், கட்சி வெறிகொண்டவனாயிருந்தால், அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நாட்டில் விபரீதங்கள் பல ஏற்படுவதைக் கண்டிருக்க முடியும். அப்படிப்பட்ட விபரீதங்களைக் கண்டு கைகொட்டும் கருத்தற்றவனல்ல, நான்.

'உத்தமரை, ஒருவனின் வெறி, கொன்றுவிட்டது; அதற்குப் பார்ப்பன மக்கள் மீது பழி சுமத்தக்கூடாது,' என்று எடுத்துரைத்தேன். உத்தமரின் சேவைகளை, எடுத்துரைத்தேன். அந்த நேரத்தில், எந்தக் காங்கிரஸ்காரருக்கும், ஏற்படாத அதிர்ச்சி இப்போதேன் ஏற்பட வேண்டும்?

அந்த நிகழ்ச்சி முடிந்த சின்னாட்களுக்கெல்லாம், காங்கிரஸ் தேசியக் கவியான நாமக்கல் கவிஞரை, ஓரிடத்தில் நான் சந்திக்க நேர்ந்தது. அப்போது, அவர் என்னைப் பாராட்டினார்—'காந்தியடிகளின் அருமை பெருமைகளைப் பலர், உரைக்கக் கேட்டிருக்கிறேன்; ஆனால். ரேடியோவில், தாங்கள் எடுத்துச் சொன்னதைக் கேட்ட போது, நான் மனம் குளிர்ந்தேன்; யாரும் அப்படிச் சொல்லவில்லை,' என்று தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார்.

என்னுடைய சொந்த விஷயங்களை, எடுத்துக் கூறுவது, எனது வழக்கமல்ல; ஆனாலும், இதனை, இங்குள்ள தேசிய நண்பர்களுக்காகக் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, என்னைப் போன்றவன்—காந்தியாரின் அடிப்படை ஆசைகளையும், அவைகளைச் சாதிக்க அவர் ஆற்றிய அரும் பணியினையும் கண்டு அகமகிழ்ந்தவன்—இந்தச் சிலையைத் திறந்து வைப்பதில், பொருத்தமுடையதாகாது, என்று யார் கூற முடியும்?

நான், என்ன, நாள் முழுதும் காங்கிரசைத் தூற்றிக் கொண்டிருந்துவிட்டு, தேர்தல் காலத்தில், காங்கிரசிலே நுழைந்து கொண்டு, வேட்டையாடியவனா! காங்கிரஸ் போர்வையைப் போட்டுக்கொண்டு, அதிகார வேட்டையாடியவனா! இந்தக் கரம், வெள்ளையனோடு கை குலுக்கிய கரமா! வகுப்புவாதத்தை வளர்த்து, வெறிச் செயல் ஏற்பட பாடுபட்ட கரமா! பள்ளி வாழ்வு முடிந்ததும், உத்தியோகத்துக்குச் செல்லாது, ஊருக்காக உழைக்கும் கரம்! பொது வாழ்வுக்காகப் பாடுபடும் கரம்! இந்தக் கரம் தவிர, வேறு எந்தக் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—1—1954 செவ்வாய்

"பாலைவன லலிதா!"

சென்னை ராஜ்ய முதலமைச்சர் பதவியை, ஜனநாயக முறைக்கும் பதிலாக, சாகசத்தாலும் சாணக்கியத்தாலும் அபகரித்து, கடந்த இருபது மாத காலமாக, இங்கு ஆட்சி புரிந்துவரும் ஆச்சாரியார் அவர்களை, அவரது சீடகோடிகளும், அவரிடம் சிரத்தை மிக்கவர்களும், 'அமானுஷ்ய மனிதர், அற நெறியாளர், மாமுனிவர், மகரிஷி, ஒழுக்கசீலர், உத்தம புருஷர், தரும புத்திரர், தயாநிதி, படாடோபம் அற்றவர், பதவி ஆசை இல்லாதவர், பரந்தாமன் பக்தர், பாவங்களின் சத்துரு' என்பன போன்ற அடைமொழிகளால் வர்ணித்து, அதனை, அறியாமையிலிருக்கிற மக்களை நம்ப வைப்பதற்குத் தங்களுக்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிற காரணத்தால், அதனை நம்பும்படி. பொன் முலாம் பூசி பொதுமக்களை ஏமாற்றி வருகிறார்கள் என்பதை, நாம் சொல்லித் தெரிய வேண்டிய நிலையிலே நாடு இல்லை என்பதை நாம் அறிவோம். நரியின் போர்வையிலே உலவும் புலி என்ற பேருண்மையைக் கடந்த சில மாதங்களின் நிகழ்ச்சிகள் வெகு வேகமாக விழிப்புள்ள மக்களுக்கு உணர்த்தி வருகிறது. ஆனால் ஆச்சாரியார், 'தனது அசகாய தந்திர முறைகள் அமரத்வம் பெற்றது; அதனை அறியும் ஆற்றல் திராவிடத்தவருக்கு ஏற்படப் போவதில்லை' என்ற எண்ணத்திலேயே உறைகிறார் என்றே கருதுகிறோம். 'பலரைச் சில நாட்கள் ஏமாற்றலாம்; சிலரைப் பல நாட்கள் ஏமாற்றலாம்; எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது' என்ற சாதாரண உண்மையையும் மறந்துவிட்டவராகவே ஆச்சாரியார் காட்சியளிக்கிறார். சொல் வேறு, செயல் வேறாக உள்ள அவரது நடவடிக்கைகளில் பொதிந்துள்ள சூட்சமத்தை நாட்டு மக்கள் கூர்ந்து கவனிக்கின்றனர். போர்வை கழிக்கப்பட்டு, அவரது சுய உருவம் அவர்கள் கண்களுக்கும் கருத்துக்கும் தெரிகிறது. 'பதவி ஆசை எனக்கு இல்லை. அவர்கள் கூப்பிட்டார்கள்; வந்தேன்,' என்று கூறிய ஆச்சாரியார், தன்னுடைய கட்சிக்காரர்கள் பெரும்பாலோர் விருப்பத்திற்கு விரோதமாக, பதவியிலே ஒட்டிக்கொண்டிருப்பதற்காக மேற்கொண்டுள்ள முறைகள், அவரது அதிகார வெறியையும், பதவிப் பித்தையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. ஐவர் வழக்கில், 'கொலைகாரர்களைச் சிறையிலே பிடித்து அடைத்தேன்? அபாரதம் கொடுத்தால் விட்டுவிடுகிறார்கள்' என்று திருவொற்றியூர் கூட்டத்தில் பேசிய ஆச்சாரியார், மேலும் தண்டிப்பதற்காக, ஐகோர்ட்டிலே 'ரிவிஷன்' அப்பீல் போட்டுவிட்டு, மேல் சபையிலே சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் லட்சுமணசாமி போன்ற பொறுப்பானவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, 'ஒரு சர்க்கார் அப்பீலோ 'ரிவிஷ'னோ போடுவது எப்படித் தவறாகும்' என்று கேட்கும் பல காட்சிகளிலே ஆச்சாரியாரைப் பார்க்கும் மக்கள், இடத்துக்கு ஒரு பேச்சு, நாளுக்கு ஒரு பேச்சு, ஆளுக்கு ஒரு பேச்சு என்ற ரீதியில் பேசும் நாலாந்தரப் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவரோ என்று சந்தேகிக்கும் அளவில் நிலைமை வளர்ந்திருக்கிறது என்றால், யாரும் தவறாகக் கருத மாட்டார்கள் என்றே கருதுகிறோம்.

'ஊருக்கு உபதேசம், உனக்கல்லடி கண்ணே' என்பதற்கு உதாரணமாக விளங்குகிறார். உதாரபுருஷர் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டை, இரண்டு நாட்களுக்கு முன் வழங்கியிருக்கிறார்.

ஆற்றுக்கு அணை போடும் அஸ்திவார விழாவானாலும் ஆண்டாள் புகழ் பாடும் திருவெம்பாவை மகாநாடானாலும், பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமானாலும், பழங்குடி மக்கள் சேரியானாலும், கவிகள் நாயகம் திருநாளானாலும், நாட்டு நிலை பேசும் சட்ட மன்றமானாலும்—எங்கு சென்றாலும் ஆச்சாரியார், அறநெறியின் மாண்பு பற்றியும் தர்மம் தழைக்க வேண்டிய அவசியம் பற்றியும், தர்மம் தாழ்ந்ததாலே தரணி படும் அல்லல் குறித்தும், ஆச்சாரியார் பேசத் தவறுவதில்லை. பஞ்சமா பாதகங்கள்—கள், களவு, காமம், சூது, பொய்—ஆகியவற்றின் பிடியிலே மக்கள் படும் அவதி குறித்து இந்த 'மாமுனிவர்' கூறும் உபதேசம், ஊர் மக்களை உருக்குகிறது. மற்றவர் நாட்டிலே பரவிவரும் நாசத்தை இவர் எடுத்துக் கூறத் தவறியதேயில்லை. ஆனால், இவரோ 'நான் கூறியபடி நட; நான் நடக்கும்படியல்ல!' என்பதற்கு நடமாடும் உதாரணமாக அடிக்கடி காட்சியளிக்கிறார்.

"கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, கிண்டி குதிரைப் பந்தயத்திற்கு சென்னை முதல் மந்திரி ஆச்சாரியார் வந்திருந்தார்; பந்தயக் குதிரைகள் ஓடுவதைக் கண்டு களித்தார்; 'சுதந்திர கப்' பந்தயம் ஆரம்பமாவதற்குமுன், திறந்த காரில் பவனி வந்தார்; பக்கத்திலே, போலீஸ் கமிஷனர் பார்த்தசாரதி அய்யங்கார் இருந்தார்; பிறகு, கவர்னர் உட்காரும் ஆசனத்தில் அமர்ந்து, குதிரைப் பந்தயத்தைக் கண்டு களித்தார். 'சுதந்திர கப்' பந்தயத்தில், 'பாலைவன லலிதா' (Desert Grace) என்ற குதிரை வெற்றி பெற்றது. அதன் சொந்தக்காரர் செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியாரின் தம்பி சிதம்பரம் செட்டியாருக்கு, ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்க முலாம் பூசிய வெள்ளிக் கோப்பையை பரிசளித்தார்: குதிரையோட்டி அகமத் கானுக்கு ஆசிர்வாதம் செய்தார்' என்று பத்திரிகை செய்தி கூறுகிறது. நம்முடைய கவலை, யாருக்கும் பரிசு கிடைத்தது—பாலைவன லலிதாவிற்கா, சோலைவன சுந்தரிக்கா—என்பதல்ல!

மக்கள் உள்ளத்தை உணரத் தவறியதால் வந்ததுதான் இந்த அவதி!

இதைப் படிப்பினையாகக் கொண்டு மொழிவழி மாநிலங்களை அமைக்க வேண்டும்

"'வட நாட்டில், திராவிடக் கழகங்களைப்போல் கட்சிகள் இல்லையென்றும், அதனால், அங்கு நல்ல சூழ்நிலை இருக்கிற'தென்றும், ஒரு அன்பரிடம் திரு. பிரகாசா கூறினார்."

'வட நாட்டில் எதிர்ப்பு இயக்கமில்லை எனக் கூறுவது சரியல்ல; ஒரு பெருமகனே பேச முடியாத சூழ்நிலை அங்கு ஓரிடத்தில் வளர்ந்துவிட்டது.........அங்கு பெருந் தலைவர்களே, இதனை ஆதரிக்க முற்பட்டு விட்டார்கள். இந்தச் சோக நிலைக்குக் காரணம், நம் தலைவர்கள், எவ்வப்போது இடித்துக் காட்டி, மக்கள் உள்ளக்கிடக்கையை அவர்களுக்குத் தெரிவிக்க முடியாத நிலை வளர்ந்துவிட்டதுதான். அவர்கள் மொழிவழி மாகாணம் கேட்பவர்களின் உள்ளக்கிடக்கையைக் காணவேண்டும்.......மக்கள் மொழிப்பற்றை மறந்துவிட மாட்டார்கள். இந்த உண்மையை இந்தி மொழியாளர்கள் உணராததால்தான் இன்று இந்நிலை ஏற்பட்டுவிட்டது."

"எந்த நாட்டில் எதிர்ப்பு இயக்கம் இருக்கிறதோ அந்த நாடுதான் வலிமையுள்ள நாடு எனப் போற்றப்படும். எந்தச் சமுதாயத்துக்கு, வீரத்துடன் நின்று எதிர்த்துப் போராடும் திறமையுள்ளதோ அதுதான் வாழும். எந்த நாட்டில் எல்லோரும் பொறுமையுடன், தங்கள் இன்னல்களைப் பொறுத்துச் சமுதாயத்துக்கு அடங்கி நடந்து வருகிறார்களோ அந்த நாட்டிலுள்ள மக்கள் சுயாலத்திற்கு அடிமையாகி விட்டார்கள் என்றுதான் பொருள். மனிதன் சுபாவம். அவனுடைய கடமையை உணர்த்தவேண்டித்தான் சூழ்நிலை மாறுகிறது. அந்தச் சூழ்நிலையும், சந்தர்ப்பமும்தான், நமக்குப் பெரிய சமயத் தலைவர்களையும், அரசியல் ஞானிகளையும் தந்துள்ளது. இதனை உணராமல், நாம், எதிர்ப்பை அடக்க முற்பட்டால், சமுதாயத்தில் புரையோடி, அது அழியும் என்பதில் ஐயமில்லை."

—'த. நா.'

குதிரைப் பந்தயம்—கொடுமை நிறைந்த சூது இயந்திரம்; அதன் பிடியிலே சிக்கி நொறுங்கிய குடும்பங்கள் ஏராளம்; உல்லாசமான வாழ்வு வாழ்ந்த எத்தனையோ நல்லவர்களை ஓட்டாண்டி ஆக்கிவிட்டது; இந்த நாசத்தை அகற்ற வேண்டியது, நாடாள்வோரின் கடமை என்பதை, திராவிட முன்னேற்றக் கழகம். தெளிவான குரலில் திட்டவட்டமாக எடுத்துரைத்து வந்திருக்கிறது. சகல முற்போக்குக் கருத்தினரும் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டியதின் இன்றியமையாமையை வற்புறுத்தியுள்ளனர். ஆளும் வாய்ப்புப் பெற்ற காங்கிரசும், இது வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. குதிரைப் பந்தயம் கூடாது என்று இயற்றப்பட்ட சட்டம் தூங்கிக் கொண்டிருக்கிறது. ஐந்து வருடம் கழித்து அமுல் நடக்கலாம் என்ற உத்தரவு வேறு.

இந்நிலையில், பஞ்சமாபாதகங்களின் பகைவர் ஆச்சாரியார், சூதாட்டம், தம் முறைக்குப் புறம்பானது எனத் தம் பட்டம் அடிக்கும் ஆச்சாரியார், குதிரைப் பந்தயத்திலே பவனி வருகிறார் என்றால், அதிலே என்ன அர்த்தம் என்று கேட்கிறோம். கவர்னர்கள் மட்டுமே இம்மாதிரி பவனி வருவது வழக்கமாம். அந்தக் காரியத்தை இந்தச் சந்நியாசி—சத்புருஷர் செய்கிறார்—கவர்னர் ஆசனத்திலே அமர்ந்து குதிரை ஓடுவதைக் கண்டு களிக்கிறார் என்றால், பதவியிலே இவருக்கு ஆசையில்லை; படாடோபத்திலே மோகமில்லை என்பதன் பொருள் என்று கேட்க விரும்புகிறோம்.

ஆச்சாரியாரின் அத்யந்த சீடர் டாக்டர் சுப்பராயன் மந்திரியாக இருந்த நேரத்தில், 'குதிரைகள் எனது வளர்ப்புப் பிள்ளைகள்; அவைகளை அழியவிடமாட்டேன்,' என்று—பெருமையாலே கொட்டப்பட்டு, வாழ்விழந்து தவிக்கும் எத்தனையோ இக்காயகப் பிள்ளைகளைப் பற்றிக் கவலையற்று, 'குதிரைக் குமாரர்கள்' பற்றி, குமாரமங்கலம் குறுநில மன்னர் கூறினார்.

ஆச்சாரியார், "சூதாட்டத்தின் தீமை குறித்து என்னைவிட யார் எடுத்துரைத்திருக்கிறார்கள்? இதனால் என்மீது பலர் கோபிக்கக்கூடும்" என்று கூறினார். ஆனால், அவரின் உபதேசத்திற்கும், நடைமுறைக்கும் என்ன பொருத்தம் என்பதைச் சிந்திக்கக் கோருகிறோம்.

செட்டிநாட்டரசரின் தம்பிக்கு 'பாலைவன லலிதா' மூலம் கிடைத்த பன்னிரண்டாயிரம் ரூபாய் சாதாரணமாய் இருக்கக்கூடும். அது கிடைக்காமல் இருந்தாலும், பெரிய நஷ்டம் ஒன்றும் வந்துவிடப்போவதில்லை; ஆனால் அந்தப் பன்னிரண்டாயிரம் ரூபாய்க்குப் பின்னால்—சோவெனக் கதறும் எத்தனை தாய்மார்களின் கண்ணீர், மனைவிமார்களின் அறுந்த தாலி, குழந்தைகளின் வளையல், குடும்பச் சொத்து, வண்டி-வாகனம், தோப்பு-துறவுகள் நிறைந்திருக்கிறது என்பதை வேதத்தின் சாரத்தையும், உபநிஷத்தின் உட்பொருளையும் உணர்ந்த ஆச்சாரியார் உணராமல் இருக்கிறார் என்றால், யாரும் நம்பமாட்டார்கள். உணர்ந்தும் செய்கிறார் என்றால, அதற்குக் 'கபட வேஷதாரி' என்பதைத் தவிர, வேறு என்ன பொருள் என்று கேட்கிறோம்.

"'பாலைவன லலிதா'க்களின் கைகளைக் குலுக்கி, முதுகைத் தட்டிக் கொடுக்கும் ஆச்சாரியார் ஒரு காட்சியிலே தெரிகிறார்—மற்றோர் காட்சியிலே, பாகவத காலட்சேபமும், பாவங்களின் தீமையையும் உபதேசிக்கும் ஆச்சாரியார் தெரிகிறார். இந்த இரண்டு காட்சிகளிலும் அவர் தாங்கும் வேடத்தைப் பொது மக்கள் புரிந்து கொள்கிற வரையில், அவரது யோகனையும், நாட்டை நாசமாக்கும் ஆதிக்கமும் குறையப் போவதில்லை.

'சுபிர் சிப்'களும், 'கல்யாணி'களும், 'விண்ட்சர் லேடி'களும், 'விபன்ஞ வுட்ஸ்'களும், 'ரீகல் பிரின்ஸ்'களும், 'ரெட் லேபல்'களும், ஓடும் குதிரைப் பந்தயத்தை விட, கொடுமையான பந்தயத்தை, திராவிட அரசியலில் ஆச்சாரியார் ஆடுகிறார்.

திராவிடத்தைப் பாலைவனமாக்கி, அதிலே, லலிதமான—பயங்கரமான தனது ஆரிய ஆதிக்கத்தை நிலைநாட்ட அவரது தந்திர முறைகள் பயன்படுகின்றன. அதனை திராவிடர் இன்னும் நல்ல முறையில் உணரும் வரையில், அவரது கபட நாடகம் நடந்தே தீரும்!

வேலையின்றித் தவிப்பு!

பம்பாய், ஜன. 2—

சுரங்கத் தொழிலில் 'டெக்னாலஜி' பயிற்சி பெற்ற இந்தியர்கள் தவிப்பதாகவும், வேறு வேலைகளாவது கிடைக்குமென்று அவர்கள் தேடியலைவது மிகப் பரிதாபமாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

பெரியார் படம் திறக்க ஆச்சாரியாருக்கு அழைப்பு

திருச்சி, ஜன. 3—

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் உருவப்படத்தை, திருச்சி நகர சபைக் கட்டிடத்தில் திறந்து வைக்க வேண்டுமென கோரி, முதல் மந்திரி ஆச்சாரியாருக்கு, அழைப்புக் கடிதம் ஒன்றை மேற்படி நகர சபையின் தலைவர் ஏ. ராமசாமி அவர்கள் அனுப்பியுள்ளார். பெரியாரின் ... டி. நாயுடு அவர்களைக் கொண்டு பெரியார் அவர்களின் உருவப் படத்தைத் திறப்பதாக இருந்த முடிவுக்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டதால் முன்பே அத்தீர்மானம் கைவிடப்பட்டதாம்.

ஆந்திராவில் கைதிகள் விடுதலை அடைவர்

கர்னூல், ஜன. 3—

ஆந்திர மாகாணம் தனித் தலைமந்தை பொட்டி, ராஜபத்தி உள்ள... லவிதக் குற்றம் செய்து தண்டிக்கப்பட்டுள்ள சில கைதிகளை, விடுதலை செய்ய சர்க்கார் முடிவு செய்திருப்பதாக, நேற்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. பொங்கல் விழாவுக்கு முன்பே, இந்தமுடிவு அமுலாகலாம். ஆந்திர மந்திரி சபையின் கூட்டத்தின் போதே மேற்படி முடிவு செய்யப்பட்டது.

காங்கேயம் உபதேர்தல் எதிரொலி

சென்னை, ஜன. 3—

அண்மையில் காங்கேயம் தொகுதியில், சென்னை சட்ட சபைக்கு நடைபெற்ற உபதேர்தலில் தோழர் கே. ஜி. பழனிச்சாமி கவுண்டர் வெற்றிபெற்ற செய்தி அனைவரும் அறிந்ததே.

ஆனால், இப்போது அவரின் தேர்வை ஆட்சேபித்து காங்கிரஸ் அபேட்சகர் தோழர் ஏ. கே. சுப்ரமணிய கவுண்டர் டில்லியிலுள்ள 'தேர்தல் கமிஷனிடம்' தனனுடைய ஆட்சேப மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு

—(:)—

எதிர் தரப்பு சாட்சிகள் விசாரணை

திருச்சி, டிச 31—

டால்மியாபுரம் ரயில் நிறுத்த அறப்போர் திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் திரு கே. பி. ராதாகிருஷ்ண மேனன் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

முதலாவது சாட்சியாக தோழர் இரா. நெடுஞ்செழியன் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“நான், எம். ஏ பட்டம் பெற்றவன்; ‘மன்றம்’ என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும், பிரசுரகர்த்தாவாகவுமிருக்கிறேன்; இது சென்னையிலிருந்து வெளிவரும் மாதமிருமுறை பத்திரிகை; நான், லால்குடி தி மு கழக மாநாட்டில் கலந்து கொண்டேன்; இம்மாநாட்டிற்கு தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமை வகித்தார். அம் மாநாட்டில், ‘டால்மியாபுரம்’ என்பதை ‘கல்லக்குடி’ என்று மாற்றுமாறு சர்க்காரைக் கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜூலை 15-ம் தேதிக்குள் சர்க்காரிடமிருந்து தக்க பதில் கிடைக்காவிட்டால், அன்று முதல் சாத்வீக நடவடிக்கையில் இறங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது; நேரடி நடவடிக்கை தோழர் மு கருணாநிதி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது; போராட்டத்திற்கு முந்தி லால்குடியில் ஒரு மாநாடு நடைபெற்றது; அம் மாநாட்டில் தோழர்கள் மு கருணாநிதி, ராஜா சிதம்பரம் எம். எல். ஏ, எம். பழனியாண்டி எம். எல். ஏ, சி. என். அண்ணாதுரை ஆகியோர் பேசினர்; போராட்டத்தைச் சாத்வீக முறையில் நடத்தும்படி கேட்டுக் கொண்டனர்.”

சர்க்கார் தரப்பு வக்கீல் திரு மகாதேவ சாஸ்திரி, குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

“நான், கழகத்தின் கூட்டுக் காரியதரிசியாக சென்ற 18 மாதமாக இருக்கிறேன்; ரயில் வண்டியை நிறுத்தத் தீர்மானம் செய்யப்படவில்லை; இந்தப் போராட்டம், பிரதம மந்திரி நேரு ‘நான்-சென்ஸ்’ என்று சொன்னதினால் ஏற்பட்டது; காங்கிரஸ் பத்திரிகைகளில், கல்வீச்சு நடைபெற்றதாக செய்தி வெளியானதைப் பார்த்தேன்; போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென்ற தீர்மானம் செய்தித் தாள்களில் பிரசுரமாகியுள்ளன; அன்றையத் தினம், யார் யார் போராட்டத்துக்குச் சென்றனர் என்பது தெரியாது; ரயில் சங்கிலியை இழுத்து நிறுத்துவதென்ற திட்டமே இல்லை, குறுக்கே படுத்து நிறுத்துவதாக இல்லை; தோழர் கருணாநிதி கழகத்தின் ஆண்டுதலின் பேரில் ரயில் முன் நிற்கவில்லை; தாமே அப்படிச் செய்துள்ளார்.”

அடுத்த சாட்சியாக தோழர் கே. ஆர். ராஜ சோழகர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:

“நான், டால்மியாபுரம் போராட்டத்தை நடத்த வேண்டிய ஏழுபேர் குழுவின் கமிட்டி மெம்பர்; சட்ட வரம்புக்குட்பட்டுப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது; நான் ஜூலை 16-ம் தேதியன்று தொண்டர்களுடன் சென்றேன்.”

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

“நான் சம்பவ தினத்தன்று, மூன்று வண்டிகள் வரும்போது பிரசன்னமாக இருந்தேன்; சம்பவ தினத்தன்று நான் பெயர்ப் பலகையின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தேன்; அங்கு தான் தமிழ்ப் பெயர் ஒட்டப்பட்டது. முதல் இருமுறை தொண்டர்கள், ரயில்முன் படுத்த போது கைது செய்யப்பட்டனர்; நான், பிளாட்பாரத்தில் சும்மா நின்றுகொண்டிருந்தேன்; போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; 1-30 மணி ரயில் வந்த பின், தொண்டர்கள் ரயில்முன் படுக்கவில்லை; எல்லா எதிரிகளும் பிளாட்பாரத்தில்தான் நின்று கொண்டிருந்தார்கள்; பெயர்களைக் குறிப்பிட்டால், யார் யார் நின்று கொண்டிருந்தார்களென்று குறிப்பிட முடியும்; அன்று நான், சிலரைப் பார்த்தேன்; அங்கு 1-ம் எதிரி கண்ணதாசன் இருந்தார்; மற்றவர்களில், யார் யார் அங்கு இருந்தார்கள் என்று நிச்சயமாகக் கூற முடியாது; வண்டி சிறிது நேரம் சென்று நின்றது; ஏனென்றால், போலீஸ் தடியடி நடந்ததினால் கூட்டத்தினர் ஓடினர்; கூட்டத்தினர் ரயில்முன்னும் ஓடிக்கொண்டிருந்ததினால், ரயில் நிற்கும்படி நேரிட்டது; ரயில் நின்ற இடத்தில் கல்வீச்சு நடந்தது.”

அடுத்த சாட்சியாக, கல்லக்குடி பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் மு. நடேசன் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“நான் சம்பவ தினத்தன்று பிளாட்பாரத்தில் இல்லை; லால்குடி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எனக்குத் தெரியும்; சாத்வீகமான முறையில் போராட்டம் நடைபெற வேண்டுமென அங்கு முடிவு செய்யப்பட்டது; நான், சிமெண்டு கம்பெனியில் வேலை செய்தேன்.”

அடுத்த சாட்சியாக முத்தமிழ் செல்வன் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“நான், வெள்ளனூர் பஞ்சாயத்துப் போர்டு தலைவர்; போர்டு கூட்டத்தில், டால்மியாபுரம் பெயரை மாற்றவேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; அத்தினத்தன்று, போராட்டம் எப்படி நடக்கிறதென பார்த்துக்கொண்டிருந்தேன்; குண்டு சுடப்பட்டதும் அங்கிருந்து போய்விட்டேன்; போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் தோழர் ஏ. பி தர்மலிங்கத்தைப் பார்த்தேன்.”

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

“நான் தி. மு. கழக மெம்பர்; சம்பவ தினத்தன்று, நான், தொண்டன் அல்ல; ரயில் 3. விக்கு 10 கெஜ தூரத்தில் நின்று கொண்டிருந்தேன்; எனக்கு எதிரிகள் கண்ணதாசன், ராதாகிருஷ்ணன், தர்மலிங்கம் இவர்களைத்தான் தெரியும்; 17-ம் எதிரி அன்றுதான் அறிமுகப் படுத்தப்பட்டார்; 4, 5 பேர் ரயில் பாதையில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தேன்; யாரென்று தெரியாது; என்ஜின் டிரைவருக்குக் கல்லடிபட்டது எனக்குத் தெரியாது; ஏதோ கல்லெறி நடந்தது.”

அடுத்தபடியாக, தாபாய் பஞ்சாயத்துப் போர்டைச் சேர்ந்த தோழர் குஞ்சுஉடையார் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

“எனது போர்டு, டால்மியாபுரம் ஸ்டேஷனின் பெயரை மாற்றக்கோரி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது; சம்பவ தினத்தன்று நானும், 24-ம் எதிரி தம்புச்சாமியும், சுமார் 1-30 மணிக்கு முத்துசாமி உடையார் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்; சாப்பிட்டு வெளியே வந்ததும் குண்டு சப்தம் கேட்டது; நானும், தம்புசாமியும் ஸ்டேஷன் பக்கம் என்ன நடக்கிறதென பார்க்கச் சென்றோம்; போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லும்முன் கூட்டம் ஓடிவருவதைக் கண்டோம்; அவர்கள் அப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றிக் கூறினர்; அதனால், நாங்கள் இருவரும் மேலே செல்லவில்லை.”

குறுக்குக் கேள்விக்குப் பதிலளிக்கையில், சாட்சி கூறியதாவது:—

“வேடிக்கைப் பார்க்கவே சென்றேன்; 24-ம் எதிரியை 5, 6 மாதமாகத் தெரியும்; முதல் இரண்டு வண்டிகள் வரும்பொழுது நான் ரயில்வே ஸ்டேஷனில் இருந்தேன்; முத்துசாமி உடையார் வீட்டில் தம்புசாமியைப் பார்த்தேன்; போலீஸ் ஸ்டேஷனுக்கு அப்பால் செல்லாததால், ரயில் இருப்பதைக் காண முடியவில்லை, எனக்கு 17, 24 எதிரிகளைத்தான் தெரியும்; முதல் இருமுறையும் ரயில் வந்தபோது தர்மலிங்கத்தைப் பார்த்தேன்.”

அடுத்தபடியாக, வெள்ளனூர் பஞ்சாயத்து போர்டு உபதலைவர் எம். பொன்னுசாமி சாட்சியம் கூறினர். அவர் கூறியதாவது;—

“டால்மியாபுரம் பெயரை மாற்ற வேண்டுமென்று போர்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது; நான் 1-30 மணி ரயிலில் வந்தேன்; ராதாகிருஷ்ணனும் (17-ம் எதிரி) அதே பெட்டியில் உட்கார்ந்திருந்தார்; குண்டு சப்தம் கேட்டவுடன் கதவுகளைச் மூடிவிட்டோம்; ரத்தினமும் என்னும் எதிரியும் அதே பெட்டியில் இருந்தார்; அவருடைய கையில் ஒரு குண்டடிபட்டது; நான் அவரை லால்குடி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன்; அன்று தர்மலிங்கத்தைப் பார்த்தேன்.”

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

“நான், லால்குடிக்கு சினிமா பார்க்கச் சென்றேன்; நான் தி மு. கழக உறுப்பினர் அல்ல; எனக்கு தர்மலிங்கத்தையும், ராதாகிருஷ்ணனை மட்டும் தெரியும்; டால்மியாபுரம் ஸ்டேஷனில் ரயில் 10 நிமிஷம் நின்றது; வண்டி வந்ததும், ராதாகிருஷ்ணனும், ரத்தினமும் வண்டியில் என்னுடன் ஏறினர்; குண்டு, வண்டிக் கதவைத் துளைத்துக் கொண்டு ரத்தினத்தின்மேல் பாய்ந்தது.”

அடுத்து, தோழர் ரெங்கனாத செட்டியார் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

“நான் இருப்பது பெருவளநல்லூர்; சம்பவ தினத்தன்று, டால்மியாபுரத்திற்கு சிமெண்டு பலகை வாங்கச் சென்றேன்; 1-30 மணி ரயிலில் ஊர் திரும்பி வந்தபோது, ஸ்டேஷனில் ஒரு பெரிய கூட்டத்தைக் கண்டேன்; அதனால் பஸ் மூலம் செல்ல எண்ணி திரும்பிப் போகையில், வழியில் தர்மலிங்கத்தைச் சந்தித்தேன்.”

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது;—

“நான், ராஜா சிதம்பரம், எம். எல். ஏ.-யின் சகோதரர்; தி. மு கழகக் கட்சியினர், எனது சகோதரருக்கு தேர்தலில் ஆதரவளித்தனர்.”

அடுத்து பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் ராமச்சந்திரன் சாட்சியம் கூறியதாவது:—

“நான், சம்பவ தினத்தன்று வேடிக்கை பார்க்க வந்தேன்; அன்று சுமார் 2 மணிக்கு தர்மலிங்கத்தை ஒரு ஓட்டலில் கண்டேன்.”

குறுக்கு விசாரணையில், சாட்சி கூறியதாவது:—

“எனக்கு தர்மலிங்கத்தை மட்டுமே தெரியும்.”

வண்ணை—பாண்டியன் படிப்பக முதலாவது ஆண்டு விழா

சென்னை, ஜன 4—

சென்னை—வண்ணை கே. எஸ் பாண்டியன் படிப்பகத்தின் முதலாண்டு விழா, நேற்று சிறப்புற நடைபெற்றது.

இதை யொட்டிய பொதுக் கூட்டம், நேற்று மாலை, வண்ணை கல்லறை மைதானத்தில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கென அமைக்கப்பட்டிருந்த மேடையின் வலது பக்கத்தில் படுகொலைக்காளான மாவீரர் கே. எஸ். பாண்டியனின் உருவம், கைப்படமாகக் காட்சியளித்தது.

கூட்டம் சரியாக 6 மணிக்குத் துவங்கியது. கூட்டத்திற்குத் தோழர் காஞ்சி-கல்யாண சுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்.

“‘நாமெல்லாம் இந்தியர்; நாமெல்லாம் தமிழர்’ என்று பேசும் ஆச்சாரியார், சமயம் நேரும்போது ‘நான் ஒரு பிராமணன்,’ என்று சொல்லத் தவறுவதில்லை. காரணம், பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து உள்ளத்திலே படிந்துபோன ஜாதிப் பித்துதான்! அந்தப் பித்து, ஒழியவே ஒழியாது” என்று அவர் தலைமை உரையிலே குறிப்பிட்டார் அடுத்து தோழர் கிருஷ்ணசாமி முனுசாமி சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்.

தோழர் ஆர். எஸ். பாண்டியன், ‘கல்லக்குடிப் போராட்டமும் தி. மு. கழகமும்’ என்பது குறித்து மிக விளக்கமாகப் பேசினர்.

கடைசியாக தோழர் மு கருணாநிதி சொற்பொழிவாற்றினர்.

உண்டியல் மூலம் கல்லக்குடி நிதிக்காக ரூ. 26 வசூலாகியது. நெல்லைத் தோழர்கள் திரவியம், தாமஸ் மூலமாக கல்லக்குடி நிதிக்கென ரூ. 80—1—0 வசூலித்துத் தரப்பட்டது.

பம்பாய் தி. மு. கழகம்

25—12—53-ல், பம்பாய் தி. மு. கழகத்தின் புத்தாண்டு செயற்குழுத் தேர்தல், தோழர் எல் என் செழியன் தலைமையில் நடைபெற்றது. என். தியாகராசன் செயலாளராகவும், மா. அண்ணாமலை துணைச் செயலாளராகவும், பி எல். செல்லையா பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: உ அ. செல்லையா, தோ இ செல்லையா, ஏ எல் பெருமாள், என். ஏ பி. சுவாமி, ஆர் ஏ பெருமாள், ம. இரா. குறள்தாசன், எம். பன்னீர்செல்வம், ம. இரா- எ. ரெத்தினசாமி, எம் மாரியப்பா, எம். என். கணபதி, என். பி. கமலசேகரன், சி. த மு. இர. அரியசங்கரன், ஏ. என் ஆறுமுகம், எஸ் ஏ செல்லையா சி. சிவகுருநாதன், என் வன்னிநாயகம், எம். துரைப்பாண்டியன், செல்லை. இரா. இளம்வழுதி, கே. எஸ். நடராசன், ஆ பாலசந்திரன், எல். என். செழியன், த. மு பொற்கோ ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வல்லநாடு தி. மு. கழகம்

30—12—53-ல், இவ்வூர் தி மு கழக அமைப்புக்கூட்டம் தோழர் மு. மதியரசு தலைமையில் நடைபெற்றது அதுபோது, தோழர்கள்: எஸ். வி. அருணாசலம் செயலாளராகவும், கே. வேல்மயில் துணைச் செயலாளராகவும், பி. சண்முக வடிவேல் பொருளாளராகவும், பி. திராவிடமணி மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும், 17 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

சீர்திருத்தக் கழகம் தி. மு. கழகமாகியது

30—12—53 அன்று தொடையூர் (குளித்தலை தாலுகா, திருச்சி மாவட்டம்) சீர்திருத்தக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் தோழமை இல்லத்தில் நடைபெற்றபோது, சீர்திருத்தக் கழகத்தை ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனப் பெயர் மாற்றப்பட்டு, தோழர்கள்: க. மாணிக்கம் செயலாளராகவும், மு செங்குட்டுவன் துணைச் செயலாளராகவும், சி. கந்தசாமி பொருளாளராகவும், துரை.மதிவாணன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் தோழர்கள்: பெ. கருப்பையா, சி. அரங்கசாமி, வ. சுப்பையா, இரெ. சண்முகம், இராம-நடராசன், ப. வெள்ளையன், சு. பாண்டியன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், 16—1—54-ல், இவ்வூர் தி. மு கழகக் கிளையின் துவக்க விழாவும், திராவிடர் திருநாளும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.

கீழப்பெரும்பள்ளம் தி. மு. கழகம் துவக்கம்

30—12—53ல், தோழர் வி. மருதவாணன் தலைமையில் தி. மு கழகத் திறப்பு விழா நடைபெற்றதை யொட்டி, ஐயனூர் திடலில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி. ஏ. பாண்டியன், டி. கே. டி. சாமி, சம்பந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழமைக் கழகம்

சென்னை, ஜன. 3—

27—12—53-ல், சேப்பாக்கம் தோழமைக் கழகத்தின் மூன்றாம் ஆண்டுத் தேர்தலில், தோழர்கள்: வி. விநாயகம் செயலாளராகவும், அ. குமார் பொருளாளராகவும், ரா. கண்ணன் புத்தக நிர்வாகியாகவும், மு. துரைசாமி விளம்பரதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முத்துக்கவுண்டன்பாளையம் பொதுக்கூட்டம்

24—12—53-ல், தி. மு. கழக சார்பில, தோழர் கே. எஸ். மலையப்பசாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: எ. வீராசாமி, வி கே. கலைமணி, பிரிவினைப் பித்தன், வி. சண்முகநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

“கஞ்சித் தொட்டியை மூடாதீர்”

கடையநல்லூர், ஜன. 3—

கைத்தறி நெசவாளர்களுக்காக நடத்தப்பட்டுவந்த கஞ்சித் தொட்டி 31—12—53 முதல் மூடப்பட்டுவிட்டது. எனவே, பெரும்பாலான ஏழை நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, மேலும் 3 மாதங்களுக்கு கஞ்சித் தொட்டியை நீடிக்க வேண்டுமென்று, சென்னை சர்க்கார் கைத்தொழில் மந்திரிக்கும், ரெவின்யூ போர்டாருக்கும், நெல்லை மாவட்டக் கலெக்டருக்கும், இக்கர பஞ்சாயத்து போர்டு தலைவர் எஸ். கே. முகமது யூசுப் அவர்கள் தந்தி கொடுத்துள்ளார்.

நன்றி

மலாயத் தோழர் அமிழ்தம் இராமனுதன் அவர்கள் இலங்கை சுற்றுப் பிரயாணத்தில் ஒத்துழைத்த இலங்கை தி. மு கழகத் தோழர்கட்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

"வெள்ளையனோடு கைகுலுக்கிய கரமல்ல என் கரம்!"

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

சிலையைத் திறப்பது பொருத்தமாகும்?

காந்தியார், காங்கிரசைக் கட்டிக் காத்தார்—வளர்த்தார்—நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தார். காங்கிரசில் நாலணா மெம்பராகக்கூட அவர் இருந்ததில்லை, பலகாலம்! தான் விரும்பிய விடுதலை கிடைத்துவிட்ட தென்றதும், "காங்கிரஸ் தேவையில்லை—கலைக்கலாம்," என்றும் சொன்னார். "காங்கிரஸ் லாபவேட்டைக்காரர்களின் கூடாரமாகிவிட்டது," என்று கூறி மனமும் நொந்தார்.

நான், காந்தியார் பெயரைச் சொல்லி, லாபம் பெறுதவன்! அவர்களால் அழுத்தி வைக்கப்பட்டிருப்பவன். அவர் வளர்த்த காங்கிரசின் நிலை என்ன, இப்போது? பழைய கோட்டையில் வௌவாலும், புற்றுக்குள் பாம்பும், இருப்பதுபோல, காங்கிரசுக்குள் கயவர்களும், சுயநலவாதிகளும் இருப்பதாக அவர் கூறினார். அவர், எங்கே? இன்று இருப்போர் எங்கே? அந்த ஒளி எங்கே! இந்த இருள் எங்கே!!

இந்தச் சிலை திறப்பு விழாவை, என்னைக் கொண்டு செய்ய வேண்டுமென்பதில், இங்கிருக்கும் கம்யூனிஸ்டுத் தோழர்களும் விரும்பி, ஒத்துழைத்ததாக அறிந்தேன். அந்த நண்பர்களுக்கும், என்னுடைய நன்றி.

இவ்வண்ணம், மாற்றுக் கட்சியினருடன் மனமொத்துப் போவதுதான், அரசியல் நாகரீகம். எனது தலைவர் பெரியாரும், முதலமைச்சர் ஆச்சாரியாரும் நடிகள் நாயகத்தின் நாளில், ஒரே இடத்தில் சந்தித்தார்கள். அது, அரசியல் நாகரீகம்.

இன்று நான் காந்தியாரின் சிலையைத் திறக்கிறேன்! இது ஓர் புனிதமான நாள் எனக் கூறுவேன். இந்தச் சிலையைத் திறக்கும் விஷயத்தில், கட்சிப் பாகுபாடு கட்சி வெறி இல்லாது, எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைத்திருக்க வேண்டும்—அது தான், அரசியல் நாகரீகம்.

அப்படியின்றி, அரசியல் அமளியிலீடுபட்டால், இந்த உபகண்டத்தின் பிதாவுக்குக் கீர்த்தி தேடியவர்களாக மாட்டோம்.

எனக்கும், காங்கிரசுக்கும், பலமான கருத்து வேற்றுமைகள் உண்டு; அதேபோல, கருத்து ஒற்றுமைகளும் உண்டு. காங்கிரசுக்கு மட்டுமல்ல—மற்றக் கட்சிகளுக்கும் எனக்குமிடையே, கருத்து வேற்றுமைகளும் உண்டு; ஒற்றுமைகளும் உண்டு.

நன்றாகச் சிந்தித்தால், விளங்கும் வேற்றுமைகள், கொஞ்சம்; ஒற்றுமைகள் அதிகம். இந்த ஒற்றுமைப் பண்பு வளர, ஒவ்வொரு கட்சிகளும், அரசியல் அமளியிலீடுபடாமல், ஒத்துழைக்கும் மனப்பாவம் ஏற்பட்டு, அரசியல் நாகரீகம் வளர வேண்டும்.

காந்தியார் இறந்த பிறகு கட்டப்பட்டுள்ள சமாதியிருக்கும் ராஜகட்டத்துக்கு, அமெரிக்க நாட்டுத் தூதுவர் வந்து, மல்லிகைச் செண்டுகளை வைத்து வணக்கம் செலுத்துவதையும், பாகிஸ்தான் நாட்டுப் பிரதமர் வந்து மரியாதை செய்வதையும், வேறு பல வெளிநாட்டுக்காரர்கள் வந்து தமது அன்பு வணக்கங்களைச் செலுத்திப் போவதையும், படங்களில் காண்கிறோம். இதன் பொருள் என்ன? வெளிநாட்டுக்காரர்கள் வந்து வணங்குவதன் சூட்சமம் என்ன? அவர்களையெல்லாம் படம் எடுத்துப் பிரமாதமாக எழுதி, 'பார்! பார்!! அவர்கள் செய்யும் அஞ்சலியை' என்று பெருமையோடு வெளியிடுகிறோமே, அவர்களெல்லாம், யார்? காங்கிரஸ்காரர்களா? காங்கிரசிலே இருந்தறியாதவர்கள்! அதுமட்டுமல்ல, காங்கிரசையே எதிர்த்தவர்கள்! இந்த நாட்டுக்குச் சொந்தமில்லாதவர்கள்—வெளிநாட்டினர்!

அவர்களெல்லாம், காந்தியாரின் நினைவுச் சின்னத்தைக் கண்டு, பூரிப்புக் கொள்வதை விட — மரியாதை செய்வதைவிட நான் செலுத்தும் அன்பு, எந்தளவுக்குக் குறைந்தது, என்று கூற முடியும்? அவர்களைவிட நான் செலுத்தும் மரியாதை, மட்டமாகவா, இருக்கும்?

அவர்கள் மரியாதை செலுத்தும்போது, அகமகிழும் உங்களுக்கு, அரசியல் ஆவேசமும், ஆத்திரமும் ஏற்படலாமா! மலர் தூவுகிறான், வெளிநாட்டான். அதைவிட, நான் தூவும் மலர், எவ்விதத்தில், கெட்டதாகும்? இந்தப் பொது அறிவு—அரசியல் விளக்கம்—நம்மவர்களுக்கு அவசியம், இருக்க வேண்டும்.

ஆனால், நாம் நினைப்பது போல, அவ்வளவு சுலபத்தில் இங்கே வந்து விடாது. ஏனெனில், வருடத்துக்கு ஒரு தடவை, நமக்குள், இன்னும் மன்மதன் எரிந்தானா? எரியவில்லையா?—என்கிற பிரச்னையே தீரவில்லையே! மன்மதனை கண்டவர்கள் யாரும் கிடையாது—சண்டையோ, ஓயாமல் நடக்கிறது!! இதைப் போல, எத்தனை நாளைக்கு, இருக்க முடியும்?

சுதந்திரம் கிடைத்த பின், உத்தமர் காந்தியடிகளே சொன்னார்—'சுதந்திரத்தில் ஒரு கட்டத்தைத் தான் தாண்டியிருக்கிறோம்; இந்தச் சுதந்திரம், ஏழை மக்களின் வாழ்க்கையை மாற்றக் கூடியதாக அமையவேண்டும்,' என்று.

அவர் வெளியிட்ட அதே கருத்தைத்தான், நானும் கூறுகிறேன்; "கனிட படையவில்லை. கவலை கொள்ளுகிறேன்!" என்றார். அது தானே, நிலையும்!

சுதந்திரம், காகிதப் பூவாக இல்லாமல், மணமுள்ள பூவாக இருக்க வேண்டுமானால் மாற்றுக் கட்சிகள் யாவும், வந்த சுதந்திரத்தை அனுபவிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

யாரைப் பார்த்தாலும், எதைக்கேட்டாலும், 'சுதந்திரக் குழந்தை! சுதந்திரக் குழந்தை!!' என்கிறார்கள். அந்தக் குழந்தைக்குப் பாலூட்டி விட்டால் மட்டும் போதாது—தாலாட்ட வேண்டும்—சொக்காய் போட வேண்டும்—விளையாட்டு காட்ட வேண்டும்—இது அத்தனையையும் தாயே, செய்துவிட முடியாது, மாமன்மார் விளையாட்டுப் பொம்மைகள் வாங்கிவர, தங்கை தாலாட்டுப் பாட, உற்றார் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொஞ்ச—இவ்விதம் வளர வேண்டும், அக் குழந்தை!

அப்படியில்லாமல், 'குழந்தையை நான் தானே பெற்றேன்,' என்று சொல்லி 'மற்றவர் எவரும் அருகில் வரக்கூடாது.' என்று பெற்றெடுத்த தாய் சொன்னால், குழந்தையை எவரும் சீந்தார்! குழந்தையின் அருமை பெருமையையும் அறியார்!! அதுபோலவே, பிறந்த சுதந்திரக் குழந்தையைச் சீராட்டி வளர்க்க, எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சந்தர்ப்பம் வேண்டும். குழந்தைக்கு, அடிக்கடி உணவு தந்து—அதிகமாகவும் தந்து—யாரிடமும் அண்டவிடாமல், சில பணக்காரக் குடும்பத்திலே வளர்க்கப்படும் குழந்தை, கடைசியில் நோஞ்சானாகிவிடும்! டாக்டரிடத்தில் செல்ல நேரிடும்!!

இதையே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுதந்திரக் குழந்தையைத் தூக்கி மகிழ, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் சந்தர்ப்பம் தாருங்கள். எங்களிடம் விட்டுப் பாருங்கள் நிச்சயம், கெடுதல் வராது.

அப்படியே, கேடேதல் வருவதாகக் கருதுவீர்களேயானால்—உங்களுக்குப் பிடித்தமான, கிருஷ்ணன் கதையையேச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிருஷ்ணனுக்குப் பாலூட்டச் சென்ற பூதகிபோல நாங்கள் என்றால், கிருஷ்ணன் கவனித்துக்கொள்வான்—அந்த நம்பிக்கையாவது இருக்கக்கூடாதா உங்களுக்கு!! அதை விட்டு விட்டு, எங்களைக் கண்டால், ஏன பயப்பட வேண்டும்?

காந்தியாரின் சிலையை நான் திறந்து வைப்பதைக் காணும் நீங்கள், முகத்தைத் தொங்கப் போட்டுக்கொள்வது?—'பார்! எதிர்க் கட்சிக்காரனாகிய அவனே எங்கள் காந்தியின் சிலையைத் திறக்கிறான். எங்கள் காந்தியின் பெருமையல்லவா, இது?,' என்று நீங்கள், மார்பல்லவோ, தட்ட வேண்டும்!

காந்தியாரின் புகழுக்குக் காரணம், குடும்பத்திலேயிருந்தவர்களால் பட்டும் உண்டானதல்ல, வெளியேயிருந்தவர்கள் அவரைக் கண்டு; அவருக்கு அஞ்சலி செய்ததால்தான், உலக ஒளியானார், அவர்.

நான், திறப்பதைக் கண்டு, சந்தோஷமடைய வேண்டும். இந்த மேடையில் எனது நண்பர் காங்கிரஸ் எம். எல். ஏ. தோழர் மாசிலாமணி அவர்களும் இருந்திருந்தால், மிகவும் பெருமையாயிருந்திருக்கும்.

நான் யார்? நீங்கள் யார்? நமக்கு இடையிலிருக்கும் உறவு முறை—முறிகின்ற முறை—இருக்கலாகாது. இதனை எனதருமை காங்கிரஸ் நண்பர்களுக்கு, வலியுறுத்திச் சொல்லுவேன். சில பல, கருத்து மாறுபாடுகளிருக்கலாம், எனக்கும் உங்களுக்கும்—காந்தியாரின் சில கொள்கைகளை மறுக்கின்ற முகாமில்தானிருக்கிறேன், நான்; ஆனால், அதற்காக, நாட்டு விடுதலையை மறைக்கவில்லையே! உத்தமர் வாங்கித்தந்த விடுதலையை மறைத்துக் கூறுபவன்—ஏமாளி!!

அவர் விரும்பியது இந்த நாட்டுக்கு சுயராஜ்யம் மட்டுமல்ல—அவர் விரும்பிய சுயராஜ்யமல்ல, இன்று, இங்கே யிருப்பதும்.

'ஏழை-பணக்காரன், கூடாது! மதத்தின் பெயரைச் சொல்லி, ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்வது கூடாது—மோதலை உண்டாக்கக்கூடாது—ஜாதி ஆணவம் கூடாது," என்றார் அவர்.

அத்தகைய விடுதலை பூமியைக் காண விரும்பினார்! அதனாலேயே, ஒருமுறை, அவரைக் கேள்வி கேட்டபொழுது, கேட்டவருக்கு விளக்கினார்—

"வைணவர் என்றால் யார்? நெற்றியிலே திருநாமமும் நெஞ்சிலே வஞ்சகமும், கழுத்திலே துளசி மணியும், கருத்திலே கபட எண்ணங்களும் கொண்டவர்களல்ல. உண்மையான உள்ளம் கொண்டவர்கள்," என்று விளக்கினார்.

அவர், அன்றோர் நாள், தென்னாட்டுக்கு வந்திருந்த நேரத்தில், நானும் என்னைச் சார்ந்த இயக்கத்தினரும் 'ராமாயண எரிப்பு' கிளர்ச்சியிலீடுபட்டிருந்தோம். அதைப்பற்றி, அவரிடம் குறிப்பிட்டபோது, உத்தமர் குறிப்பிட்டவார்த்தைகளை, தேசிய நண்பர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர் சொன்னார்—

"நான் கூறும் ராமன் வேறு! ராமாயணத்தில்—வால்மீகியும் கம்பரும் வர்ணிக்கும் ராமன் வேறு! என்னுடைய ராமன் சீதையின் புருடனல்ல; தசரதரின் மகனுமல்ல; இராவணனைக் கொன்றவனுமல்ல; அவன் அன்பின் சொரூபம்! உண்மையின் உருவம்" என்று விளக்கினார்; அப்போது, நான், 'திராவிட நாடு' இதழில், தீட்டினேன—'எரியிட்டார்! என் செய்தீர்?'—என்று.

இதுபோல அவருடைய அடிப்படைக் கொள்கைகளை அலசிப் பார்த்தால்தான், அவருடைய எண்ணங்களுக்கும் எனது இயக்கத்தின் அடிப்படை ஆசைகளுக்குமிடையே, ஒற்றுமையிருப்பதைக் கண்டோம். அதனால்தான், காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டதும், எனது இயக்கத் தலைவர், பெரியார், ஒரு அறிக்கை விடுத்தார்—

"இந்த நாட்டின் பெயரை, இந்தியா என்பதற்குப் பதில் 'காந்தி நாடு' என்றழையுங்கள்—'இந்து மதம்' என்பதற்குப் பதில் 'காந்தி மதம்' என்று மாற்றுங்கள்—இவ்வண்ணம் செய்தால், ஏற்கத் தயார்!" என்று கூறினார். யார், முன்வந்தார்கள்? இன்றிருக்கும் காங்கிரஸ் தலைவர்களைக் கேட்கிறேன், யார் ஏற்றுக் கொண்டார்கள்?

அதுமட்டுமா? காந்தியார் அடிக்கடி சொன்னார்——'உண்மையே, என் கடவுள்!' என்று. இதனை யார். ஏற்றுக்கொண்டார்கள்? இதுபோல, அவர் கூறிச் சென்ற பல வழிகளை, உங்களால், ஜீரணிக்க முடியவில்லை—ஆனால், மாற்றுக் கட்சியிலிருக்கும் நாங்கள் ஏற்று பணி செய்து வருகிறோம். அந்த நற்பணியின் பெயரால், மணிமண்டபம் கட்டி, உருவச் சிலையைத் திறந்துவைக்கும் இந்த நேரத்தில், உங்களை நான், கேட்டுக்கொள்வேன்—அவரது பெயரால்—

'அரசியல் நாகரீகத்தை வளர்க்கப் பாடுபடுங்கள்';

'ஜாதி பேதம் ஒழியப் போராடுங்கள்;'

'இல்லாமைக் கொடுமையொழிய ஒத்துழையுங்கள்';

'மத நம்பிக்கையால் விளையும் கேடுகளை ஒழித்துக்கட்ட முன்வாருங்கள்!'

கைத்தறி ஆடையை அணியுங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.